**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of Communal Clash Cases in Southern Districts, Madurai.

Case No : **CC.No. 13/2017**

Prosecution witness: **2**

| | | | |
|---|---|---|---|
| Name: | முருகன் | Caste: | |
| Father'sName: | | Calling: | |
| Village: | | Religion: | |
| Taluk: | | Age: | |

A1, A3 absent. Petition u/s 317 crpc filed and allowed. A2 present.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of** 1873 **on the day of** 26.04.2023

**முதல் விசாரணை**:

நான் தற்போது மதுரை மாவட்டம் வாலாந்துார் காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணியில் உள்ளேன். நான் முன்னதாக உசிலம்பட்டி நகர் காவல் நிலையத்தில் தலைமைக்காவலராக பணியில் இருந்தபோது கடந்த 02.12.2015 ம் தேதி காலை 9.00 மணிக்கு நானும் தலைமைக்காவலர்-ஜெயபாண்டி என்பவரும் சார்பு ஆய்வாளர்-திரு.அசோகன் ஆகியோர் உதவி ஆய்வாளர் தலைமையில் வாகன சோதனைக்காக உசிலம்பட்டி-தேனி சாலையில் உசிலம்பட்டி பிரணவ் கல்யாணமண்டபம் அருகில் வாகன தணிக்கை செய்துகொண்டிருநதபோது கிழக்கில் இருந்து மேற்காக வந்த TN 61 D 8125 என்ற ரித்திகா என்று பெயர் எழுதப்பட்ட அபே ஆட்டோவை சோதனை செய்தபோது ஆட்டோவின் ஓட்டுநரை விசாரித்தோம். அவர் தேனி மாவட்டம் கோடாங்கிபட்டியை சேர்ந்த பெரியகருப்பன் மகன் ஈஸ்வரன் என்றும் ஆட்டோவில் பின்னால் பயணம் செய்த நபரை விசாரித்போது பெருமாள் மனைவி சந்திரா என்றும்

கூறினார். அவர்களிடம் எங்களை அறிமுகம் செய்துகொண்டு சந்தேகத்தின் பேரில் உங்களை சோதனை செய்யவேண்டும் என்று கூறினோம். மேலும், தங்களை சோதனை செய்ய குற்றவியல் நீதித்துறை நடுவரிடமோ, அல்லது அரசு பதிவிதழ் பெற்ற அலுவலரிடம் அழைத்து செல்லும்படி கேட்க உரிமையுள்ளது என்று கூறியபோது அவர்கள் சார்பு ஆய்வாளராகிய தாங்களே சோதனை செய்யலாம் என்று கூறினார்கள். சந்திரா என்பவர் வைத்திருந்த காக்கிநிற பொட்டலத்தை என்ன உள்ளது என்று கேட்டபோது அவர் தயக்கத்துடன் கஞ்சா இருப்பதாக கூறினார். பின்னர் சார்பு ஆய்வாளர் 9.15 மணிக்கு அவரிடம் சோதனை சம்மத கடிதம் பெற்று அவர் எடுத்து ஆஜர் படுத்திய கஞ்சா பொட்டலத்தை வாங்கி அதை பிரித்து பார்த்தபோது அதில் கஞ்சா என்ற போதை பொருள் இருந்தது. அதை அருகில் இருந்த கடையில் இருந்து தராசை வாங்கிவந்து நிறுத்து பார்த்தபோது அது சுமார் 2 கிலோ இருந்தது. பின்னர் சந்திரா மேற்படி கஞ்சா வாங்கிய விபரம் பற்றியும் விற்பது பற்றியும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். 10.30 மணிக்கு கஞ்சாவையும் ஆட்டோவையும் அத்தாட்சியில் கைப்பற்றினோம். பின்னர் கைப்பற்றப்பட்ட கஞ்சாவில் இருநது இரசாயன பரிசோதனைக்காகவும், மாதிரிக்காவஹும் தலா 50 கிராம் வீதம் 2 பொட்டலங்கள் எடுத்து நூலால் கட்டி போலீஸ்பட்டன் சீல் வைத்து S1 , S2 என குறியீடு செய்தோம். மீதம் உள்ள 1 கிலோ 900 கிராம் கஞ்சாவை நூலால் கட்டி போலீஸ்பட்டன் சீல் வைத்து P1 என குறியீடு செய்தோம். பின்னர் எதிரிகளை 11.15 மணிக்கு அவர்களை கைது செய்வதற்கான காரணத்தை கூறி கைது நமூனா சார்பு செய்து சார்பு ஆய்வாளர் கைது செய்தார். பின்னர் 11.45 மணிக்கு சொத்துக்களையும் எதிரியையும் நிலையம் கொண்டு வந்து பாராவசம் ஒப்படைக்க உதவி ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் ஜெயபாண்டியும் சாட்சியாக

கையொப்பம் இட்டோம். சிறப்பு சார்பு ஆய்வாளர்-திரு.அசோகன் இறந்துபோனார். தலைமைக்காவலர்-ஜெயபாண்டியும் தற்போது உயிருடன் இல்லை. ஜெயபாண்டி மற்றும் அசோகன் அவர்களது கையொப்பம் எனக்கு தெரியும். நாங்கள் 11.45 மணிக்கு எதிரிகளையும் சொத்துக்களையும் நிலையம் கொண்டுவந்த பின்னர் உதவி ஆய்வாளர் திரு.அசோகன் நிலைய குற்ற எண் 590/2015, ச/பி 8(C) r/w 20(b)(ii)(B) and 25 NDPS Act ஆக வழக்கு பதிவு செய்தார். பின்னர் முதல் தகவல் அறிக்கையும் தொடர்புடைய ஆவணங்களையும் நீதித்துறை நடுவருக்கு அனுப்பி வைத்து விசாரணை நகலை ஆய்வாளர் பார்வைக்கு வைத்தார். சொத்துக்களையும் எதிரிகளையும் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தார். சார்பு ஆய்வாளர் தயாரித்த சோதனை சம்மத கடிதம் **அ.சா.ஆ. 4** ஆகும். 1ம் எதிரி வழங்கிய ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1ம் எதிரியின் கையொப்பம் **அ.சா.ஆ. 5** ஆகும். சம்பவ இடத்தில் தயாரிக்கப்பட்ட அத்தாட்சி **அ.சா.ஆ.**6 ஆகும். 1ம் எதிரியை கைது செய்ததற்கான கைது நமூனா **அ.சா.ஆ. 7** ஆகும். சார்பு ஆய்வாளர் தயாரித்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.**8 ஆகும். (ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்பட்டது) இதுசம்பந்தமாக என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

**3ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நாங்கள் சாதாரணமாக ரோந்து பணியில் ஈடுபட்டோம். நாங்கள் காலை 9.00 மணிமுதல் சோதனையில் ஈடுபட்டோம். நாங்கள் சந்தேகத்தின் பேரில்தான் வாகனத்தை மறித்து நிறுத்தினோம். அந்த வாகனத்தில் 3ம் எதிரி ஆண்டிச்சாமி பயணிக்கவில்லை. நாங்கள் அவரை சம்பவ இடத்தில் பார்க்கவில்லை. எதிரிகளுக்கு சட்டப்படியான உரிமை உள்ளது என்ற விபரத்தை எதிரிகளுக்கு எடுத்துக்கூறியதாக ஆய்வாளர் விசாரணையிலும் மற்றும் சோதனை சம்மத கடிதத்திலும் குறிப்பாக கூறப்படவில்லை என்றால்

சரிதான். எதிரிகளை சார்பு ஆய்வாளர் தான் சோதனை இட்டார். சிறப்பு சார்பு ஆய்வாளர்-அசோகன், ஜெயபாண்டி மற்றும் நான் சம்பவ இடத்தில் இருந்தோம். நாங்கள் காவல் நிலையத்தில் இருந்து எவரையும் அழைக்கவில்லை. சம்பவ இடத்தில் ஆவணங்களை சார்பு ஆய்வாளர் எழுதி தயார் செய்தார். சம்பவ இடத்தில் தயாரிக்கப்படும் அனைத்து ஆவணங்களிலும் சம்பவ இடத்தில் இருந்த சாட்சியாக இருந்த நபர்கள் கையொப்பம் இடவேண்டும் என்றால் சரிதான். அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையொப்பம் செய்துள்ளேன். மற்ற ஆவணங்களில் நான் கையொப்பம் செய்யவில்லை. கைது நமூனா, ஆய்வு நமூனா மற்றும் சோதனை சம்மத கடிதத்தில் எந்த அதிகாரியின் முன்னர் எந்தெந்த சாட்சிகள் முன்பு மேற்படி ஆவணங்கள் தயார் செய்யப்பட்டது என்று குறிப்பிடவில்லை என்றால் சரிதான். உசிலம்பட்டி பிரணவ் திருமண மண்டபம் முன்னர் உள்ள கடைக்காரர்கள் மற்றும் அங்கு வசிப்பவர்களை சிறப்பு சார்பு ஆய்வாளர் சாட்சியாக அழைத்தாரா என்றால் அழைத்தார் ஆனால் எவரும் முன் வரவில்லை. சிறப்பு சார்பு ஆய்வாளர் அழைத்து வரமறுத்த சாட்சிகளின் பெயரை நான் ஆய்வாளர் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். மாதிரி பொட்டலங்களை சார்பு ஆய்வாளர் எடைபோட்டார். சரியாக அளந்துதான் எடைபோட்டார். ஆட்டோவில் ஏறி சோதனை செய்யவில்லை. நான் எதிரிகளிடம் சோதனை சம்மத கடிதம் பெற்ற பின்னர் கஞ்சா இருப்பதை தெரிந்துகொண்டேன். அதன் பின்னர்தான் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டது. சாதாரணமான ரோந்து பணிக்கு செல்லும் பொழுது படிக்கல், தராசு ஆகியவை எடுத்து செல்லவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரிதான். எந்த கடைகாரரிடம் தராசு வாங்கினோம் என ஆய்வாளர் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். நான் சம்பவ இடத்தில் நான் சொன்னதுபோல் சொன்ன நேரத்தில் கண்காணிக்கு சிறப்பு சார்பு

ஆய்வாளருடன் செல்லவில்லை என்றும் சம்பவ இடத்தில் எதிரிகள் யாரையும் பார்கககவில்லை என்றும் எதிரிகள் ஆட்டோவில் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றும் 1 ம் எதிரி எவ்வித ஒப்புதல் வாக்குமூலம் எதுவும் கொடுக்கவில்லை என்றும் போதைப்பொருள் எதுவும் சம்பவ இடத்தில் வைத்து கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. வழக்கின் ஆவணங்கள் நிலையத்தில் வைத்து பின்னிடடு வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றும் எதிரிகளை அச்சுறுத்தி அவைகளில் கையொப்பம் பெறப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. இந்த வழக்கில் போதைப்பொருள் விதிகள் முற்றிலும் முறையாக பின்பற்ற வில்லை என்றால் சரியல்ல. கைப்பற்றப்பட்ட சொத்துக்களுக்கும் எதிரிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல.

**3 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணையை 1 மற்றும் 2 ம் எதிரிகள்தரப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டது**